பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 18 வெள்ளிக்கிழமை [02-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 187

## மடு மாதா உற்சவத்துக்கு குறைந்த அளவு பக்தர்கள்

வவுனியா, ஜூலை 2

மன்னார் மடுமாதா தேவாலய இறுதிநாள் உற்சவம் இன்று நடைபெறுகிறது.

காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதை அடுத்து 8 மணியளவில் மடுமாதா திருச்சொரூப பவனி இடம்பெறும்.

இன்றைய வழிபாடுகளை தமிழ் மொழியில் மன்னார் ஆயர் அதி வண. ராயப்பு யோசப்பும்சிங்கள மொழியில் அனுராதபுரம்ஆயர் அதிவண. ஒஸ்வோல்ட் கோமஸும் நிகழ்த்துவார்கள்.

மடுமாதா ஆலயப் பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததை அடுத்து இந்தவருட உற்சவத்தில்அதிக எண்ணிக்கையான பக்தர்கள் தெற்கில்இருந்து வந்துகலந்து கொள்வார்கள் என எதிர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க மருத்துவர் சங்கத்தின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூலை 2

கடந்த 15 நாள்களாக தெற்கில் நடைபெற்று வந்த அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தம் நேற்று முதல் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரச மருத்துவர் சங்கப்

### இன்று ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை

பிரதிநிதிகளுடன் இன்று நண்பகல் 12.45 மணிக்கு பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததை அடுத்தே வேலை நிறுத்தம் நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டது.

பேச்சு நடத்துவதற்கு முன்னர் அரச மருத்துவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு கடமைக்குத்திரும்ப வேண்டும் என்று ஜனாதிபதி நிபந்தனை விதித்திருந்தார். இதனை அடுத்து மருத்துவர்கள் நேற்று முதல் தமது கடமைக்குத் திரும்பினர்.

நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் பணிகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளதாக சுகாதார

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நுணாவிலில் நேற்று கிளைமோர் தாக்கு!

## 3 படையினர் பலி! 7 பேர் காயம்!!

சாவகச்சேரி, ஜூலை 2

படையினர் பயணம் செய்த பஸ் ஒன்று கிளைமோர் கண்ணி வெடியில் சிக்கிய சம்பவம் நேற்று சாவகச்சேரி – நுணாவில் பகுதியில் இடம்பெற்றது.

காலை 10-30 மணியளவில் நுணாவிலில் சாவகச்சேரி நகர சபைக் கிளை பொது நூலகத்துக்கு முன்பாக கண்டி வீதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்; ஏழு படையினர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலின் போது படையினர் பயணம் செய்த பஸ் வீதியைவிட்டு விலகி அருகில் இருந்த கடையுடன் கூடிய வளவு ஒன்றுக்குள் வேலியைப்பிய்த்துக்கொண்டு புகுந்து வீடு ஒன்றுடன்மோதி நின்றது. வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்த கிளைமோர் தாக்குதலில் காயம் அடைந்த படையினர் அனைவரும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

பளைப் பகுதியில் இருந்து விடுமுறையில் செல்லும் படையினரை ஏற்றிக்கொண்டு பலாலி விமானத்தளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தாக்குதல் சம்பவங்களில் பொதுமக்கள் காயம்

### 7 பேர் ஆஸ்பத்திரியில்

நுணாவிலில் நேற்று இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்பையடுத்து இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் பொதுமக்கள் சிலர் காயமடைந்தனர் என்றும் இவர்களில் ஐவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் இருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றமிழைத்த படையினர் மீது கடும் நடவடிக்கை என்கிறார் படை அதிகாரி!

### 2 சிப்பாய்கள் கைதாகி விசாரணையில்

யாழ்ப்பாணம், ஜூலை 2

நுணாவிலில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளானது குறித்து விசாரணை நடத்தப்பட்டுக் குற்றமிழைத்த படையினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று 52 ஆவது படையணி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மல்லவராச்சி நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இன்று காலை படை அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான பயிற்சி ஆரம்பம்

### யாழ்ப்பாணத்திலிருந்து 14 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 2

மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கென யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 14 பேருக்கான கண்ணிவெடி அகற்றும் பயிற்சி கடந்த 28 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. அபிவிருத்தி திட்ட கண்ணிவெடி அகற்றும் நிபுணர் டேவிட் ரெய்லர் இந்தப் பயிற்சியை வழங்கி வருகின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### உரும்பிராயில் சூட்டுச் சம்பவம்

உரும்பிராய், ஜூலை 2

உரும்பிராய் பகுதியில் நேற்று மாலை 6. 30 மணி அளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரும்பிராய் சந்திக்கு சமீபமாக உரும்பிராய் தேவாலயத்துக்கும் இந்துக் கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. (இ-9-180-6)

### புலிகள் மோட்டார் தாக்குதல்

மட்டக்களப்பு, ஜூலை 2

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் அமைந்துள்ள பொலீஸ் காவல் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நேற்றிரவு மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

நேற்றிரவு 8. 10 மணியளவில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில்இரண்டுஷெல்கள் ரயில் நிலையக் களஞ்சியத்துக்கு அருகே விழுந்துவெடித்ததில் களஞ்சியத்துக்கு சிறு சேதம் ஏற்பட்டது.

தாக்குதலால் காவல்நிலையத்துக்கு சேதம் ஏற்படவில்லை என்றும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வை நகர சபையின் உப தலைவர் ராஜினாமா

யாழ்ப்பாணம், ஜூலை 2

வல்வெட்டித்துறை நகர சபை உப தலைவர் சந்திரசேகரம் குணசேகரம் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

நேற்று நண்பகல் வல்வெட்டித்துறை நகரசபைக் கூட்டம் நடைபெற்றபோது தனது இராஜினாமாக் கடிதத்தை அவர் வாசித்தார்.

தனது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பதவியை இராஜினாமாச் செய்வதாக அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார். இந்தக் கூட்டத்தில் ரெலோ அமைப்பின் 2 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பி. அமைப்பின் 2 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (இ-6)

## கல்லாறில் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 2

மூதூர் பகுதியில் கல்லாறு என்ற இடத்தில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இந்தத் தாக்குதலில் 5 படையினர் உயிரிழந்தனர் என்றும்—

இவர்களில் இருவரின் சடலங்களை புலிகள் மட்டக்களப்பு கதிரவெளி என்ற இடத்துக்கு கொண்டு சென்று விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்லாறுப் பகுதியில் தாம் நடத்திய தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்ததாகவும்—

ஆயுதங்கள் சிலவற்றைத் தாம் கைப்பற்றியதாகவும் புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

(இ-6)

## அம்பாந்தோட்டையில் பாரிய மனிதப் புதைகுழி

கொழும்பு, ஜூலை 2

அம்பாந்தோட்டையில் உள்ள கமநல சேவைகள் நிலையத்துக்கு அருகில் பாரிய மனிதப் புதைகுழி ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது.

தென்னிலங்கையில் பயங்கரவாதம் நிலவிய காலப் பகுதியில் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிய ஒருவர் இது பற்றிய தகவல்களை தற்போது வெளியிட்டுள்ளார் என்று காணாமற்போனோரின் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் புதைகுழி பற்றி முறையான விசாரணை ஒன்றை நடத்தி இப்பகுதியில் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கும்படி இந்தச் சங்கம் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. [இ-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இதய அஞ்சலி

யா/யூனியன் கல்லூரியில்
ஆண்டு 11 இல் கல்வி பயின்ற

## செல்வி ஜீத் சிவசத்தியபாலன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆண்டு 11
மாணவர்கள்

யாழ். யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(67097)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
11
—
01
—
1935

உதிர்வு:
24
—
06
—
1997

திதி: 02 – 07 – 99

அமரர்

## செல்லப்பா இராசலிங்கம்

( ஓய்வு பெற்ற அதிபர் )

எமது உயிரினுமினிய அப்பா!
அல்லும் பகலும் உங்கள்
அரவணைப்பில் யாமிருந்தோம்
கண்ணை இமை காப்பது போல
காலமெலாம் காத்து நின்ற அப்பாவே!
தன் பணி தவறாது தரணியில்
எமை உயர்த்தி வைத்தீர்!
சீராட்டிப் பாராட்டி பாசமுடன் சோறூட்டி
சீர்தூக்கி வைத்தவரே
பாராட்டி உமைப் பார்க்க
யாம் கொடுத்து வைக்கவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்


மனைவி, பிள்ளைகள்,
சகோதரி, சகோதரன்,
மைத்துனர்கள்.

37, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(67102)

# 10 ஆம் ஆண்டு நினைவில்

தோற்றம்
30
—
10
—
1930



மறைவு
23
—
06
—
1989

## டாக்டர் காசிநாதர் முருகேசம்பிள்ளை

திதி: 03 - 07 - 1999

ஆண்டுகள் பத்து ஓடின இன்று
நீண்ட பலகாலம் போயினும்
என்றுமே நெஞ்சைவிட்டு அகலா
உம் நினைவுகள்.........

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

அணிஞ்சிலடி,
அளவெட்டி வடக்கு.

(67093)

## முன்னோடிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். பல்கலைக்கழக உடற் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு தோற்றுவோருக்கான முன்னோடிக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கு யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்றுநர் சங்கத்தால் நடத்தப்படவுள்ளது. (இ-9)

## பிரிவுபசார விழா

பளைப் பிரதேச வேம்பொடுகேணிப் பிரிவில் கடமையாற்றி மாசார் பிரிவுக்கு இடமாற்றல் பெற்றுச் செல்லும் கிராம அலுவலர் ந. வல்லிபுரம் அவர்களுக்கு இந்திராபுரம் கிராம மக்களினால் இன்று காலை 9.00 மணிக்கு இந்திராபுரம் மக்கள் சனசமூக நிலைய மண்டபத்தில் பிரிவுபசார விழா நடத்தப்படுகிறது.

கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி. தர்மலிங்கம் விழாவுக்குத் தலைமை வகிப்பார். (இ-117)

## ஓய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஓய்வூதியம் பெறுபவர்களின் ஜூன் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினால் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-100)


மாதாந்த
பயிற்சி பரீட்சை
(2 முதல் 8 வரை)
03 – 07 – 1999
சனிக்கிழமை நடைபெறும்.
BOND,
யாழ். நகர்.
(67099)



லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
சரத்குமார் ,தேவயானி
நடித்த
ஒருவன்
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரப்படி)
Fax No. 070– 212223
FOREIGN T. P. NO-
0094 - 70 – 212223
(66667)



நாகம்ஸ்
சுன்னாகம்
கவர்ச்சித் தென்றல்
பிரசாந்
உலக அழகி
ஐஸ்வர்யா
நாசர் நடித்த
ஜீன்ஸ்
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[66950]



ராஜா
யாழ்ப்பாணம்
8ஆம் திகதி வரை
விஜய், தேவயானி,
ரம்பா. மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
10.30, 2.30
[சி/8035]


# நன்றி நவிலல்

28-6-99 திங்கட்கிழமை சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அருள் திரு. பரமசுவாமிகள் [திருவருட்சுரபி] அவர்களின் 50 ஆவது ஜெயந்திதின மகுட விழாவில் பங்காற்றி தலைமையுரை, வரவேற்புரை, வாழ்த்துரை, சிறப்புரை, ஆசியுரை வழங்கியவர்களுக்கும், நாட்டிய விருந்து [பக்கவாத்தியக் கலைஞர்கள் உட்பட] நிகழ்வினைச் சிறப்பித்த அனைத்து அன்பர்கள், அடியார்கள், சாவகச்சேரி வர்த்தகப் பெருந்தகைகள், இந்து ஆலய நிர்வாகிகள், தர்மகாத்தாக்கள், அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– வித்தக அன்பர்கள், நிர்வாகிகள்

(சி/8072)

தென் புலோலியூர் தமிழ்த்தாத்தா

## கந்தமுருகேசனாரின்
## “நல்லை நாவலன் கோவை”
## நூல் வெளியீட்டு விழா

காலம்: 03-07-1999 சனி காலை 10 மணி

இடம்: புற்றளைமகாவித்தியாலயம் புலோலி

தலைவர்: திரு. வீ. எஸ். ஏகாம்பரநாதன் (ஜே. பி.)
(இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

வரவேற்புரை: திரு. வீ. விரபத்திரபிள்ளை
(இணைப்பதிகாரி- யாழ். செயலகம்.)

வெளியீட்டுரை: பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர்- யாழ். பல்கலைக்கழகம்)

ஆய்வுரை: கலாநிதி என். சிவலிங்கராஜா
(தலைவர்- தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

தமிழறிஞர்களின் சிறப்புரைகளும் இடம்பெறும்.

உரையாசிரியர்களான
இலக்கிய கலாநிதி பண்டிதர் எம். கந்தையா,
பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம்

ஆகியோருக்குப் பொன்னாடை போர்த்திப்
பொற்கிழி வழங்கப்படும்.

-நூல் வெளியீட்டுக்குழு.

புலோலி.

[சி/8069]

# இதய அஞ்சலி

வைத்திய கலாநிதி

## பொன்னம்பலம் சொர்ணலிங்கம்

தோற்றம்: 20-04-1949 மறைவு: 27-06-1999

எங்கே நீ!
எம்மையெல்லாம் விட்டுவிட்டு
அகல் விளக்காய் சுடர்விட்ட
நீ எங்கே?
கொக்கூர் கண்ணீர் சிந்த
குடும்ப மெல்லாம் ஓலமிட
மக்கள் மனம் நோக
எங்கே சென்றாயோ
பதி தனை சிறக்கவைக்க
வைத்தியக் கலாநிதியாய்
ஈழத்தில் புகழ் பரப்ப
இங்கிலாந்து சென்று
பட்டம் பல பல பெற்று
பாரிலே புகழ் ஓங்கிய
நீ எங்கே?
பாசமாய் வார்த்தை கூறி
பரிவுடன் மருந்து தந்து
இன்பமாய் புன்னகைத்து
அருமையாய் வாழ்ந்தவனே...
எங்கே நீ!
கொக்குவில் இந்துவின் மைந்தா
[illegible] உன்னை
பெருமையோடு பார்த்து நிற்க
நீ எங்கு சென்றாய்?
ஓலமிட்டு உன்வாயில்
ஓடி வர,
அன்புக் கரம் நீட்டி
ஆதரித்த சொர்ணா!
அன்னை மனம் நோக
அருமைத் தோழர் தேட
எங்கு சென்றாய்!
உன் ஆத்மாவிற்கு
சாந்தி! சாந்தி! சாந்தி!

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/8070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனுநீதியா?

இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்காதிருப்பதும் —

அதனால் அவர்கள் பட்டினி கிடப்பதும் இப்போது வன்னியில் சர்வசாதாரணமாகி விட்டது.

மக்களுக்கு உணவு கிடைக்கிறதா இல்லையா என்பதற்கும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கும், தொடர்வதற்கும் எவ்வித தொடர்பும் இல்லாமற் போய் விட்டது. அது குறித்துக் கருத்திற் கொள்வாரும் எவருமிலர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக உணவு விநியோகம் ஸ்தம்பிதம் அடைந்த பின்னரும் வன்னி மக்களின்—அகதிகளின் வயிற்றுப் பசி குறித்துக் கவலைப்படுவோர் யாருளர்? அரசாங்கம் அதனைக் கவனத்தில் எடுப்பதும் குறைவு.

இராணுவ நடவடிக்கை இடம்பெறாத வேளைகளில் ஒழுங்கு சீருடன் இடைவெளி இன்றி, உணவு எடுத்துச் செல்லப்படுவது உறுதி செய்யப்படுவதில்லை. அதனாலேயே திடீரெனப்போர் தீவிரநிலை அடைந்ததும் வன்னி மக்கள் பட்டினி கிடக்க நேருகிறது.

இம்முறையும் அதே இக்கட்டான நெருக்கடியான நிலையே தோன்றியுள்ளது. அதனால் மூன்றரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பட்டினி கிடக்கும் அபாயம் தோன்றி உள்ளது.

''போர்க்கோஷம்'' இராணுவ நடவடிக்கை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படுவதால் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதும், மக்கள் போக்குவரத்தும் திடீர் திடீரெனத் தடைப்படுகின்றன.

கடந்த மாதத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு 350 லொறிகளில் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 160 லொறி உணவுப் பொருள்கள் மட்டுமே இரண்டு மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே உணவுவகைகள் போதாமலிருக்கும் போது இராணுவ நடவடிக்கைகள் அடிக்கடி— குறுகிய இடைவெளியில்— நடத்தப்படுவதால் போக்குவரத்துத் தடைப்படும். போக்குவரத்துத் தடைப்பட்டால் உணவு விநியோகமும் ஸ்தம்பிக்கும்.

அதன் விளைவாக முன்னர் எப்போதையும் விட இப்போது மிக மோசமான அளவுக்கு வன்னியில் உணவுத்தட்டுப்பாடும், பட்டினி நிலையும் தோன்றும் நிலை உருவாகி வருகிறது. எனவே பொதுமக்களுக்குத் தேவையான பொருள்களை போதியளவு இருப்பில் வைத்திருப்பதனையும் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதனையும் தொடர்புடைய விடயங்களாக்க வேண்டும்.

தமிழ் மக்களை மீட்பதற்காகவே போர் — என்ற பதத்தை அடிக்கடி உச்சரிக்கும் அரசு, மக்களுக்குரிய உணவுப்பொருள்களைத் தட்டுப்பாடின்றி விநியோகிக்கவும், பட்டினி நிலை எந்தக் கட்டத்திலும் தோன்றாதிருக்கவும் பார்த்துக் கொள்வது அவசியம்.

திடீரென வரும் இயற்கை அனர்த்தங்களால் மக்களுக்குரிய உணவு விநியோகம் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது ஆகலாம். ஆனால் மனிதனால் திட்டமிட்டு நடத்தப்படும் போரின் போது அவ்வாறு நிகழ்வது எவ்வாறு மனு நீதியாகும்,

மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள் இருப்பில் உள்ளதனை உறுதி செய்யாமல் போர் நடவடிக்கையை ஆரம்பிப்பது என்பது மக்கள் நலனைவிடப் போருக்கு முன்னுரிமை கொடுப்பதாகும். அது அப்பட்டமான இன அழிப்பு நடவடிக்கையே!

# கன்னிகரில்லாத் தன்மை கொண்டிலங்கிடும்

# அன்னையின் அன்புக்கு அகிலத்தில் நிகரில்லை

நம்மீது எத்தனையோ பேர்கள் அன்பு செய்கின்றார்கள். தந்தை அன்பு செய்கின்றார், மனைவி அன்பு செய்கின்றாள், மகன் அன்பு செய்கின்றான், உடன் பிறந்தார்கள் அன்பு செய்கிறார்கள், ஆனால் தாய் செய்கின்ற அன்புதான் தலையாயஅன்பு.

தாயன்புக்கு நிகரானது வேறு எதுவும் கிடையாது. தாய் நம்மை முன்னூறு நாள் சுமந்து, அங்கமெல்லாம் நொந்து பெறுகின்றாள். தன் உதிரத்தைப் பாலக மாற்றித் தருகின்றாள். கண்ணை இமை காப்பதுபோல் காத்து வளர்க்கின்றாள்.

நமக்கு இரண்டு தாயர் உண்டு. ஒன்று பெற்றதாய், மற்றொருதாய் இறைவன். தாய் இந்த உடம்பைப் பெற்றவள்; இந்தப் பிறப்புக்கு மட்டும் தாய். இறைவன் பிறவிகள் தோறும் நமக்கு உதவுகின்ற தாய், அதனால் இறைவனைத் தாய் என்று கூறுகிறார் மாணிக்கவாசகர்.

''தாயான செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ''

''தாயில் சிறந்த தயாவானதத்துவனே'' (திருவாசகம்)

''எவ்வுயிர்க்கும்தாயானானை'' (பெரியபுராணம்)

''எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ'' (கந்தரனுபூதி)

நம்தாயாரைத் தங்க ஊஞ்சலில் வைத்துப் போற்றிப் பாலும்தேனும் ஊட்டி, மலர் சூட்டி வழிபட்டாலும், தாயார் நம்மை ஒருநாள் வளர்த்ததுக்கு இணையாகாது.

சந்நியாசம் பெற்ற ஒருவனைக் கண்டுநிலத்தில் வீழ்ந்து வணங்காதிருந்தால் தந்தைக்கு நரகம். சந்நியாசம் பெற்ற ஒருவன் தாயாரைக் கண்டு நிலத்தில் விழ வில்லையானால் அந்தச் சந்நியாசி நரகத்தை அடைவான். பற்றற்ற பரமஞானியும் தாயாரைப் போற்ற வேண்டும்.

சந்நியாசம் பெற்ற ஆதிசங்கரரும், பட்டினத்துச் சுவாமிகளும் தாயாருக்குத் தகனக்கிரியை செய்தார்கள். தாய் தான் சிறந்த தெய்வம், தாய் பூமியைக் காட்டிலும் கனமானவள் என்று யட்சப்ரச்னை கூறுகின்றது.

''ஈன்றாளின் எய்ந்த கடவுளும் இல்லை'' என்பது நான் மணிக்கடிகை. இத்தகைய தாயன்பை அடியிற்கண்ட வரலாறு இனிது விளக்குகின்றது.

வடநாட்டிலே ஓர் அரசனிடம் சமஸ்தான வித்வானாகப் பேரும் புகழும் பெற்றுச் சீரும் [..]பும் எய்தி ''ஸ்ரீ ஹீரன்'' என்பவர் இருந்தார். இவர் வடமொழியில் வல்லவர். இவர் அரச சபையிற் சூரியனைப்போல் விளங்கினார். அவருடைய வாக்கின் வன்மையைக் கண்டு மன்னன் மகிழ்ந்து அவருக்குப் பல விருதுகள் வழங்கினார்.

ஒருநாள் அயல்நாட்டிலிருந்து ஒரு புலவன் வந்தான். கையில் யாளிமுகத் தோடு வைரக்கடுக்கனும், நவரத்தின மோதிரங்களும், பொற்சரிகைப் போர்வையும் உடைய அப்புலவன் சீடர்கள் பலர்சூழ மிடுக்குடன் தோற்றமளித்தான்.

## ஞானக் கதிர்

அப்புலவனுக்கும் ஆஸ்தான வித்துவானாகிய ஸ்ரீ ஹீரனுக்கும் கல்விப்போர் நிகழ்ந்தது. அதில் ஸ்ரீ ஹீரன் தோல்வியடைந்தார். அந்த அவமானத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்குச் சிந்தாமணி என்ற மகாமந்திரம் தெரியும். அம்மந்திரம் சரஸ்வதிக்கு உரியது. அதனைப் பன்னிரு ஆண்டுகள் ஜெபித்தால் கலைமகள் தோன்றிக் காட்சி தருவாள். இல்லையேல் நடு இரவில் பிணத்தின் மீது அமர்ந்து அச்சம் இன்றிப் பன்னிரண்டு நிமிடம் ஜெபித்தால் கலைமகள் காட்சி தருவாள். அவருக்கு ஸ்ரீ ஹர்ஷன் என்ற ஒரு சிறிய குழந்தை இருந்தது.

அந்த மந்திரத்தை அந்தச் சின்னஞ்சிறு பாலகனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று கருதினார். மந்திரத்தை உபதேசிக்கக் கூடிய வயது குழந்தைக்கு இல்லை. தன்மனைவி மாமல்லதேவிக்கு அந்த மந்திரத்தை உபதேசித்தார்.

''பெண்ணே! சிந்தாமணி என்ற இந்த மந்திரம் மிகச் சிறந்த அருமையும் பெருமையும் உடையது. இதனை நமது மகன் ஸ்ரீ ஹர்ஷனுக்கு உரிய காலத்தில் நீ உபதேசம் செய். இம்மந்திரத்தைப் பக்தியுடன் பன்னிரண்டு ஆண்டு ஜெபித்தால் கலைவாணி காட்சி தருவாள். இல்லையேல் நள்ளிரவில் பிணத்தின் மீது அமர்ந்து சிறிதும் அச்சமும் அருவருப்பும் இன்றிப் பன்னிரண்டு நிமிஷங்கள் ஜெபித்தாற் கலைவாணி காட்சி தருவாள் இது கிடைத்தற்கரிய அரிய பொக்கிஷம். இதனை மகனிடம் ஒப்புவிக்க வேண்டும் என்று கூறினார்.

பின்னர் ''மானம் இழந்தபின் வாழாமைமுன் இனிது'' என்ற வாக்கின்படி அவர் உயிர் துறந்தார். மனைவி மாமல்லதேவி கணவருடைய பிரிவைக் குறித்து பெரிதும் வருந்தினாள். மந்திரத்தை மகனிடம் ஒப்புவிக்கும் பொருட்டு உயிர் தாங்கிக் கொண்டிருந்தாள்.

குழந்தைக்கு வயது வந்தபின் அம்மந்திரத்தை அக்குழந்தைக்கு உபதேசித்தாள். அம்மந்திரத்தைச் சதா உச்சரிக்கும் பயிற்சியை அக்குழந்தைக்குத் தந்தாள், தன் மகன் பன்னிரண்டு ஆண்டுகள் ஜெபித்தால்தானே வாணிதேவியின் தரிசனம் கிடைக்கும்? அத்தனை நாள் தாமதிக்காமல் அதிவிரைவில் அன்னை கலைமகளின் அருளைத் தன் அருமை மகன் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஒரு நாள் இரவு 15 நாழிகை நள்ளிரவு, தன் வீட்டுக் கூடத்தில் அவள் மல்லாந்து படுத்துக்கொண்டாள். மகனை மார்பு மீது வைத்துக் கொண்டாள். கண்ணா உனக்குச் சொன்ன மந்திரத்தை நீ சொல்லிக் கொண்டே இரு அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் உனக்கு நிரம்ப பட்சணம் தருவேன். விளையாட்டுச் சாமான் வாங்கித் தருவேன்'' என்றாள் அவள் இட்ட திட்டத்தைக் குழந்தை அறியாது தானே? தாயின் மார்பில் அமர்ந்திருந்த ஸ்ரீ ஹர்ஷன் மந்திரத்தை இடையறாது ஜெபித்துக் கொண்டிருந்தான்.

தாய் விளக்கை அணைத்தாள். முன்னமேயே படுக்கை குள் ஆயத்தமாக வைத்திருந்த வடிவாளை எடுத்துத் தன் தலையைத் துண்டித்துக் கொண்டாள் குழந்தை இதை அறிந்து கொள்ளவில்லை. மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிருந்தது. நள்ளிருளிற் பிணத்தின் மீதிருந்து மந்திரத்தை ஜெபித்ததாற் கலைமகள் அன்னவாஹனத்தில் தோன்றி ஆயிரம் சந்திரோதயம் போற் காட்சி அளித்தாள்.

அந்த அருள் ஒளியில் வாணிதேவியைக் குழந்தை தரிசித்தது அந்நேரத்தில் தன்னைப் பெற்றெடுத்த அன்னை மாண்டிருக்கக் கண்டது. அந்தத்தாயை நோக்கி அழுவதா? அந்தத்தாயை நோக்கித் தொழுவதா என்று எண்ணித்திகைத்தது.

கலைமகள் அக்குழந்தைக்குப் பூரணமான அருளை வழங்கிக் கலைஞானத்தைத் தந்தருளினாள். ஸ்ரீஹர்ஷன் கலைமகளை நோக்கி 'அம்மா! என் தாய் பிழைக்க அருள் செய்' என்று தொழுது அழுது வேண்டினான். வாணிதேவி அருள் புரிந்தாள். மாமல்லதேவி உயிர் பெற்று எழுந்தாள்.

ஸ்ரீஹர்ஷன் வடமொழியில் பெரும் புலவராக விளங்கினார். இவர் நளனுடைய சரிதத்தை 'நைடதம்' என்ற நூலாகப் பாடினார். அது மிகவும் கடினமாக எளிதிற் பொருள் விளங்காதபடி இருந்தது அக்காலத்திலிருந்த புலவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஸ்ரீ ஹர்ஷனுடைய அறிவு மிகவும் கூர்மையாக இருந்தது. அவரால் எளிமையாகப் பாட இயலவில்லை. புலவர்கள் அவரைப் பார்த்துத் ''தங்களுடைய அறிவின் கூர்மை சிறிது மழுங்க வேண்டும். அப்படி மழுங்குவதற்கு நீர் திருமணம்செய்து கொள்ள வேண்டும். மாமனார் வீட்டில் சிலகாலம் இருக்க வேண்டும். காலையில் எருமைத்தயிர் அன்னம் சாப்பிட வேண்டும். அவரைப் பந்தலின் கீழ் இருக்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

ஸ்ரீஹர்ஷர் இவற்றை இவ்வாறு செய்து அறிவின் கூர்மையை மழுக்கிக் கொண்டு இரண்டாவது முறையாக நைடதத்தைப் பாடினார். அப்படிப் பாடிய நைடதமே மிகவுயர்ந்த காவியமாக இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது ''நைடதம் புலவருக்கு ஒளடதம்'' என்பது பழமொழி.

இந்த வரலாற்றினால் தாயன்பு நன்கு புலனாகிறது. தன் மகனுக்காகத் தாய் தன்னையே தியாகம் செய்து கொண்டாள்.

**திருமுருக கிருபானந்தவாரியார்.**

நன்றி: வாரியாரின் அமுதமொழி

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாவையொட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு;

★ பிற்பகல் 4 மணி — கலைவாணி வி. க. அணி எதிர் அரியாலை ஐக்கிய வி.க. அணி

★ பிற்பகல் 5.15 மணி — கிறீன் பீல்ட் வி.க. அணி எதிர் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அணி.

[க[

## நாளை

ஆனி 19

சனிக்கிழமை

திதி: சதுர்த்தி காலை 6.12 வரை பஞ்சமி வைகறை 5.33 வரை

நட்சத்திரம்: அவிட்டம் முற்பகல்: 9.29 வரை.

சுபநேரம்: 2.57 - 4.27

ராகுகாலம் 8.57 — 10.27

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நீ இறைவனைத் தேடுகிறாயா? இறையன்பால் பித்தேறிய ஒருவனைத் தேடு அவனிடத்தில் இறைவன் தோன்றுவான்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

### படையினரால் கைது செய்யப்பட்டு

# விடுவிக்கப்பட்ட இளைஞர்கள் சங்கம் அமைத்தனர்!

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் படையினரால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாம்கள் மற்றும் தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட 80 இளைஞர்களை உள்ளடக்கி புனர்வாழ்வு முகாம்களிலிருந்து வெளியேறியோர் சங்கம் என்ற புதிய அமைப்பு ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இத்தகைய முகாம்களிலிருந்து வெளியேறிய இளைஞர்களுக்கு சுய தொழிலுக்கான கடன் வழங்கும் திட்டம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மேற்பார்வையின் கீழ் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தில் இணைந்து மேற்படி கடனுதவியைப் பெறுவதற்கு புனர்வாழ்வு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட 65 பேரும், தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட 15 பேரும் விண்ணப்பித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மேற்படி இளைஞர்கள் நேற்று யாழ். செயலகத்துக்கு வரவழைக்கப்பட்டு கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலின் பின்னரே மேற்படி சங்கம் அமைக்கப்பட்டது.

இந்த இளைஞர்களுக்கு கடனுதவிகள் வழங்கப்படுவதற்கு முன் மூன்று நாள்களைக்கொண்ட சிறு கைத்தொழில் முகாமைத்துவ பயிற்சி கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படவுள்ளது. (இ-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யாழ். அரியாலை
# ஸ்ரீ சித்திவிநாயக
## புனராவர்த்
# மஹா கும்பாபிஷே

## அருளாசிச் செய்தி

விநாயகர் அடியார்களே!

அரியாலைப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் சித்திவிநாயகருக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மன நிறைவடைகின்றோம். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த அபிஷேகம் புண்ணியத்தைத் தரக்கூடியதாகும். கண்ணாரக்கண்டு மனதார அனுபவித்து ராழ்வது தெய்வீக அருளைத் தருவதாகும். பல சிறப்புக்களைக் கொண்ட அரியாலைப் பதி பல ஆலயங்களையும் சமய ஆசார சீலங்களையும் கொண்டது. இவ்வாலயத்தின் வளர்ச்சி சமய, சமூக முன்னேற்றத்திற்கு எடுத்துக் காட்டு. ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகள் விநாயகப்பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் தனித்தனிக் கோயிலாக அமைந்திருப்பது சிறப்பு. விநாயக வழிபாடு எல்லா மக்களுக்கும் ஞானக் கருணை தரக்கூடியதாகும். விநாயகரை வழிபடாது எக்காரியத்தை ஆரம்பித்தாலும் அது பூரணப்படாது என்பது சமய உண்மை. அதனாலேயே விநாயகரை விக்கினங்களை நீக்கும் தலைவராக நம் சமயம் போற்றுகின்றது. நீர்நொச்சித்தாழ்வுப் பதியில் எழுந்தருளியிருக்கும் விநாயகரின் கும்பாபிஷேகத்தை தரிசித்து சைவமக்கள் யாவரும் தர்மமுள்ளவர்களாகவும் சமயஒழுக்கமுள்ளவர்களாகவும் வாழவும் கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாசாரியர்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் ஊர்மக்களுக்கும் இறைவன் அருள் புரிய பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்,
2 ஆவது குருமஹா சந்நிதானம்.

## ஆலய வரலாற்றுச் சுருக்கம்

அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் [பழைய] நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கும் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசாட்சிக்கும் முற்பட்டது என்பது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் கருத்தாகும்.

யாழ்ப்பாணச் சரித்திர நூலாசிரியர்களுள் ஒருவரான ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பி அவர்கள் சித்தி விநாயக விக்கிரகம் இந்தியாவில் உள்ள தொண்டை நாட்டில் இருந்து யாழ்பாடியின் காலத்தில் அவரின் முதலமைச்சர் சேது நாயரின் வேண்டுகோளின் படி கச்சிக் கணேசையா எனும்பிராமணோத்தமரால் கொண்டு வரப்பட்டது எனவும் அதுவே அரியாலையில் உள்ள ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் கூறி இருப்பது கவனிக்கத் தக்கது,

எனவே இக் கோயில் மிகவும் பழைமை வாய்ந்தது என்பது தெளிவு.

1915 ஆம் ஆண்டு ஸ்ரீமான் விசுவநாதர் காசிப்பிள்ளை அவர்களால் இக் கோயில் மூலஸ்தானத்தில் இருந்து கொடி மரம் வரை புனருத்தாரணம் செய்யப்பட்டது இதற்கான சான்று உள்மண்டப முகப்பில் பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்.

இவ்வாலயத்தில் உள் மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கப் பெருமானுக்குத் தனியாகக் கோயில் அமைத்து வணங்க வேண்டும் என்ற கருத்து நிலவியதன் பயனாக 1955 ஆம் ஆண்டில் தியாகராஜ

(6 ஆம்கலம் பார்க்க)

## பிரதமகுருவின் அருளாசி

''ஊரெல்லாம் கோயில், உணர்வெல்லாம் தெய்வ பக்தி, நீரெல்லாம் தீர்த்தம், நிழலெல்லாம் மண்டபங்கள்''.

என்ற கூற்றுக்கு இணங்க, அரியாலையில் தனக்குப் பிறிதோர் நிகரில்லாமல் பல சித்திகளை வழங்கும் சித்தி விநாயகப் பெருமானுக்கு இன்று 02 - 07 - 99 வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

நிர்வாக சபையினரதும் ஊர்மக்களின் பெருமுயற்சிகளினாலும் இன்று கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. எனவே அப் பெருமானுடைய கும்பாபிஷேகத்தை ஐம்புலன்களினாலும் வழிபட்டு அவருடைய அருட்சித்திகளை நாமும், அடியார்களும் பெறுவோமாக.

இ. சுப்பிரமணியக் குருக்கள்
பிரதிஷ்டா வித்வஜோதி,
சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு,
அரியாலை.

## செயலாளரின் நன்றி


கலை ஞானங்களை வாரி வழங்குபவரும் வேருடன் வினைகளை அறுத்தருள்பவருமான நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் இற்றைக்குப் 18 ஆண்டுகளுக்குப் பின் தமது அருட் கடாட்சத்தினால் எமக்கெல்லாம் தமது குடமுழுக்கு மகா கும்பாபிஷேகத்திற் கலந்துகொள்ளும் பாக்கியத்தைத்தந்துள்ளார்

கோயிலின் உட்புறம் அமைந்துள்ள முருகன் கோயிலை முழுமையாக மாற்றியமைப்பதற்கும் ஆலய உள் மண்டபத்தில் அமைந்துள்ள வாசல்களுக்கு திருவாசிகள் அமைப்பதற்கும் பெருந்தொகையான செலவிலான மணிமண்டபத்தைக் கட்டித் தருவதற்கும், சிவன் கோயிலில் இரு விக்கிரகங்களைப் பிரதிட்டை செய்வதற்கும் முழுச் செலவினங்களையும் அன்பளிப்புச் செய்த ஒவ்வொரு குடும்பத்தவர்களுக்கும், பெருந் தொகையான பணத்தை உள்ளூர், கொழும்பு, வெளிநாடுகளிலுமிருந்து அன்பளிப்புச் செய்தவர்களுக்கும், இப்பணத்தை வசூலித்து அனுப்பிய அன்பர்களுக்கும் நிர்வாக சபை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

கட்டடவேலை, மணிமண்டப அமைப்பு, திருவாசி அமைத்தல், ஓவியம், சிற்ப ஆசாரி வேலைகள், மூலஸ்தான விக்கிரகம் பிரதிட்டை செய்தல் கிராதி வேலைகள், கலசங்கள் பிளேற்றிங் செய்தல், வர்ண வேலைகள், ஆலய தூபிகள் புனர் நிர்மாணம் செய்தல், மின் வேலைகள் ஆகிய சேவைகளைச் சிறப்பாகவும் மற்றவர்கள் போற்றத்தக்க விதத்தில் அமைத்துத் தந்த ஒவ்வொரு பிரிவினர்க்கும் நிர்வாகசபை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. அத்துடன் சிறப்புமலர் வெளியிட அன்பளிப்புகளை வழங்கிய வியாபார ஸ்தாபன உரிமையாளர்களுக்கும், ஆசிச் செய்தி வழங்கிய பெரியோர்களுக்கும் நன்றி.

எமது ஆலய குருவாக இருக்கின்ற பிரதிஷ்டா வித்வத் ஜோதி சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக்குருக்கள் அவர்கள் மகாகும்பாபிஷேகக் கிரியைகள் செய்வதற்கு அமைப்பு ஒழுங்குகளை அவரே நேரில் நின்று செய்து தந்துள்ளதுடன் நிர்வாகத்தினருக்கு தேவையான போது ஒத்துழைப்புக்களை வழங்கியும் உள்ளார். அனைவருக்கும் நிர்வாக சபையின் சார்பாகவும் எம்மூர் மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எஸ். சி. செல்வராசா
செயலாளர், நிர்வாகசபை.



## வளர்ந்து வரும் ஆலயத் தே
## பத்தியுடன் ஆட்டலெம் ப

அரியாலை நீர்நொச்சித் தாழ்வினிலேதாழ்வு
தரியாதே ஓட்டுந் தயாளன் — அரிமருகன்
சித்தி விநாயகற்குச் சீரார் குடமுழுக்குப்
பத்தியுடன் ஆட்டலெம்பண்பு.

— சொக்க

## மலர்க் குழு அமைப்பாளரின்

காலாதி காலமாகச் சைவசமயம் சைவசமய மரபிலும் இந்
லும் நம்பிக்கை கொண்ட அரியாலை மக்களின் முன்னோர்கள்
லும் தூரதிருஷ்டி நோக்கும் கொண்டவர்களாக விளங்கிய காரண
சமூக அமைப்புக்கு வேண்டிய அனைத்தையும் திட்டமிட்ட முறை
கொண்டனர்.

எமது கலாசாரம், பாரம்பரியம் அனைத்துமே திருக்கோயில
கொண்டதாகவே விளங்குகின்றன. இது பரந்துபட்ட உலக நாகரிக
இணைந்து போகின்ற விடயமாகக் காணப்படுகிறது. அந்த வகையி
யாலை நீர்நொச்சித்தாழ்வுப்பதியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ
ஆலயம் அமைந்துள்ளது. அதனால் எமது கிராமம் திருவருட் பெ
நலச் சிறப்பும் பெற்று விளங்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக
கையே எமது சமூகத்தின் அடி நாதமாக விளங்குகிறது.

இன்று எமது ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் திருவருள் து
வேறுகின்றது. இதற்கு நல்லை ஆதீன முதல்வர், எமது பிரதம
அருளாளர்கள், நிர்வாகத்தினர் தமது மன நிறைவான அருளாசி
யுரைகளையும் வழங்கியுள்ளார்கள். அவை பெருமைக்குரிய கைங்கரி

எமது ஆலயம் ஒவ்வொரு மகாகும்பாபிஷேகத்தின் போதும்
தோற்றங்களைப் பெற்று விளங்குகிறது. இராஜ கோபுர வளர்ச்சி
அம்சங்களாகும் இம்முறை மணிமண்டபத்தோடு தோற்றம் அளிப்
ளாக்காட்சியாக அமைகின்றது. இம்மகாகும்பாபிஷேகத்தைக் க
பெறுவோமாக!

பேராசிரியர் சு. மே

## இன்றைய முக்கிய நிகழ்ச்சிகள் [ 02 - 0

| | | | |
|---|---|---|---|
| அதிகாலை | 5.00 மணிக்கு | - | விநாயக வழ |
| காலை | 9.30 மணிக்கு | - | தூபிகள் அ |
| காலை | 10.26 மணிக்குள் | - | மகாகும்பாபி |
| மாலை | 4.00 மணிக்கு | - | வசந்த மண் |


**இராஜலெட்சுமி ஸ்ரோர்ஸ்**
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜெயா வைண்டிங் வேக்ஸ்**
54, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**காவேரி சில்க்ஸ்**
48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**ரவி களஞ்சியம்**
439, கண்டி வீதி, அரியாலை.

**THARRMSONS**
கட்டட ஒப்பந்தம்
தொலைத் தொடர்பு சேவை
(2790)
அரியாலை.

**E. S. பேரம்பலம் அன்ட் கொம்பனி**
50, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

**அகிலன்ஸ்**
எழுத்தோவியர் – த. சூடாமணி
426, கண்டி வீதி, அரியாலை.

**A. M. TRADERS**
(சிறி கடை)
தபாற் கட்டைச்சந்தி, அரியாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

குளிர்சாதனப் பெட்டிக்கான யுனிற்செற்-காஸ் சிலிண்டர்
ஐஸ்கோன், தும்பினாலான கால்மிதி,
K/ தைனமோ, பிளாஸ்டிக் தும்பு, கோழித்தீன் வகைகள்,
மாட்டுத்தீன் வகைகள், அப்பிள், ஒரேஞ்
என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **நாதன் ஸ்ரோர்ஸ்**
213C ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(67017)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 | 15 |
| 10 | 06 |
| 1916 | 1995 |

### அமரர் நாகமணி முத்துச்சாமி
(றிக்கோ)

**திதி: 02 – 07 – 1999**


எங்கள் அன்பான ஐயாவே...!
எம்மைப் பிரிந்து ஆண்டுகள் நான்கு
மறைந்ததையா உங்கள் நிமிர்ந்த
நடையும் நேரிய பார்வையும்
நீங்கள் அடிக்கடி கூறும் உண்மை,
நேர்மை என்பவற்றை என்றும் நினைத்து

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

16/12, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (67008)

## 3 ஆம் ஆண்டு நீங்காத நினைவு



### அமரர் வல்லிபுரம் இராஜரெட்ணம்
[ஓய்வுபெற்ற O L. D. O. ஓவசியர்]

| ஆண்டவன் படைப்பு | அந்நியன் அழிப்பு |
|---|---|
| 10-02-1933 | 04-07-1996 |

**திதி: 02-07-1999**

எம் அன்புத் தெய்வமே!

அப்பா எங்கெல்லாம் நாம் ஓடி அலைந்து திரிந்து எ து ஊருக்கு வந்து இரண்டு மாதங்க ் நிம்மதியாக கழித்தோம் அப்பா! பெ யகடை போய் வருவேன் என்று எம்மிடம் கூறி விட்டு போனீர்களே வந்தது நீங்கள் அல்ல உயிரற்ற உங்கள் உடல்தான் அப்பா! மூன்று ஆண்டுகள் ஆனாலும் எம் இதயத்து தழும்பு ஆறாது அப்பா!

உங்கள் ஆத்மா ாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சா தி! சாந்தி! ச ந்தி!

உங்கள் னைவில் கண்ணீர் சிந்தும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கெனடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## திருமலை மீனவருக்கு தொல்லை

திருகோணமலை, ஜூலை 2

நீர்கொழும்பு வென்னப்புவ, தொட்டுவாவ ஆகிய இடங்களில் இருந்து வரும் மீனவர்களால் திருகோணமலை மீனவர்கள் தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய மீன்பிடிப் பரிசோதகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாநாடுஒன்று நடைபெற்றது.

இந்த மாநாடு தீர்மானம் எதுவும் இன்றி முடிவடைந்தது.

இதையடுத்து திருமலை பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இன்று மாநாடு ஒன்று கூட்டப்படுகின்றது.

வெளியூர் மீனவர்கள் கடற்படையினரின் உதவியுடன் திருமலை மீனவர்களுக்குக் கொடுக்கும் அச்சுறுத்தல், தொல்லை ஆகியன தொடர்பாக இந்த மாநாட்டில் எடுத்துக் கூறப்படும் என மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர், (இ-3)

## நோயாளர் கப்பல் சேவை

திருகோணமலை, ஜூலை 2

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் நோயாளர் கப்பல் சேவை மீண்டும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 13ஆம், 20ஆம், 26ஆம் திகதிகளில் இந்தச் சேவை நடத்தப்படும் என்றும்—

திருமலையில் தேங்கிக் கிடக்கும் குடாநாட்டுக்கான 500தபால்பொதிகளும் இந்தச் சேவைகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப் படும் என்றும் — அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-3)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 2

கோண்டாவில் வடக்கு கலைவாணி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் செல்வி பஞ்சாட்சரம் குழுதினி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் எஸ். சண்முககுமார் பிரதமவிருந்தினராகவும், ஆசிரியர் திருமதி அருணாசலம் நாகேஸ்வரி. பாலர் கல்விக் கழகத்தலைவர் இ. தவகோபால், பாலர் கல்விக் கழக செயலாளர் திருமதி இரட்ணகோபால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கோண்டாவில் கிராம அலுவலர் எம். வேலாயுதசெயோன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர், (க)


## தேவை

**கணக்கியல், கணக்காய்வு**

பகுதிக்கு லிகிதர் பதவிக்கு ஆள்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இது தொடர்பாக 1 ஆம், 2 ஆம் திகதிகளில் சமூகம் தரவும்.

சம்பள விபரம் நேரில்.

**இல. 140, பலாலிவீதி, திருநெல்வேலி.**
[பரமேஸ்வரா சந்தி]



## BASIC ENGLISH - பேச்சு சிங்களம்

புதிய [3] மாத பயிற்சி வகுப்புக்கள்
ஆரம்பம்: 03-07-99 சனி – பி. ப. 3.30 – 4 30
சகல தரங்களுக்கும் (வாரம் 3 நாள்கள்) விசேட ஆங்கிலவகுப்புக்கள் நடைபெறுகின்றன.

T. SAGATHEVAN
46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(67069)



ARDD
CARE AND REPAIR

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

வதிவிடப்பயிற்சி பெற்றவர்களினால்
தயாரிக்கப்பட்ட பொருள்களின்

### பொருட்காட்சியும் விற்பனையும்

03 – 07 – 99
நேரம்: காலை 9 மணி — மாலை 4 மணி வரை

முதன்மை விருந்தினர்:
வைத்திய கலாநிதி
**இ. இராஜேந்திர பிரசாத்**
(யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி)
**திருமதி கௌரி இராஜேந்திர பிரசாத்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(சி / 8050)


## 31 ஆம் நாள்

### நெஞ்சைப் பிழியும் நினைவலைகளும் நன்றி நவிலலும் அழைப்பும்



| தாய்மடி | தெய்வஅடி |
|---|---|
| 29 | 03 |
| 03 | 06 |
| 1942 | 1999 |

### அமரர் முத்துக்குமாரு நடராசா
(.O அண்ணை)
(LAND OFFICER KARAVEDD, & MARUTHANKENI AGA'S OFFICE)

பண்பாலும் அன்பாலும் நெஞ்சங்கள் வென்றாய்
புரிகின்ற கடமையை உயிரென்று கொண்டாய்
புண்ணாகி வாடவே வழிசெய்து விட்டாய்
பெருமானின் பொன்னடியிற் பேரமைதி காண்க.

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதலளித்த அனைவருக்கும் அஞ்சலிகள், அனுதாபச செய்திகள் அனுப்பியவர்களுக்கும், பல்வேறு வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை (03 – 07 — 99) அமரரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்க உற்றார், உறவினர், அன்னாரது தனிப்பட்ட நண்பர்களாயிருந்து வந்து துக்கம் பகிர்ந்த நண்பர்கள் அனைவரையும் அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு அனுப்பத் தவறியிருந்தால் இந்த அழைப்பைத் தயவுசெய்து குற்றம் காணாது ஏற்று கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி (பட்டு), பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

இடைக்குறிச்சி,
வரணி. (67085)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சிவபாதம் மோகனதாஸ் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0902010585) கல்வியன்காட்டிற்கும் புதிய செம்மணி வீதி வயல் வெளி கந்தசாமி கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சிந்தியா ரெயிலரிங் கல்வியன்காடு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

[67081]

நடராசா மீனாம்பிகை என்பவரது தேசிய அடையாளஅட்டை [545191440X] சந்திரகாந்தன் மீனாம்பிகை என்பவரது விசேட அடையாள அட்டை என்பன திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல: 86, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (67046)

## T.V. கள் விற்பனைக்கு

2030, 2060, 20ఎ2 மற்றும் 27'' Sony, National ரீ.விகள் விற்பனைக்குண்டு. (மிகவும் மலிவானவிலையில்) எஸ். சதாகரன், மூளாய் றோட். மத்தியூஸ் லேன், சுண்டுக்குளி.

(66978)

## இலகு திருமண சேவை

1963 உத்தரட்டாதி விவாகரத்துப் பெற்ற ஜேர்மன் பிரசை மணமகனுக்கும், 1969 பூசம் செவ். 8 ஜேர்மனி மணமகனுக்கும் மணப்பெண்கள்தேவை. தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா, K.K.S வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (66779)

## தேடுதல்

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியை நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் சுற்றிவளைத்த படையினர் தேடுதல்களை நடத்தினர். (இ-6-3)

## யாழ்ப்பாணம்

50 வருடங்களாக சிறுகதைகள் எழுதிவரும் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 10 சிறுகதைகளும் ஒரு கட்டுரையும் சிறுகதையில் வரக்கூடிய பலவகை அழகுகளும் செறிந்தவை ரூபா 50.

(67087)

## காணவில்லை

கந்தர்மடம் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் 42, பலாலி றோட் என்னும் முகவரியில் இருந்து தனிக் கறுப்புநிற பொமனேரியன் ஆண் நாயை 1-7-99இல் காணவில்லை. கண்டவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரிக்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

(67088)

## விற்பனைக்கு

கறுப்புநிற ஆண், மூன்று மாதம் நிரம்பிய அல்சேஷன் நாய் விற்பனைக்கு உண்டு. தடுப்பூசிகள் ஏற்றப்பட்டதற்கான மருத்துவச் சான்றிதழும் உண்டு. பூச்சி நீக்கப்பட்டது. தொடர்பு இல: 396, நாவலர் வீதி, [கைலாய பிள்ளையார் கோவிலடி] பழைய உதயன் பணிமனை ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(67084)

## விற்பனைக்கு

NEWS MATE 80 நீலம் மோட்டார் சைக்கிள், கொழும்பு லைசன்ஸ், COMPUTER பதிவுப் புத்தகத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. பத்மநாதன் [மினிபஸ் உரிமையாளர்] மெதடிஸ்ற் சேர்ச் அருகில், அச்செழு வடக்கு.

[67012]

உ
சிவமயம்

# பாராட்டு விழா

செஞ்சொற்புலவர்
**முத்தையா திருநாவுக்கரசு**
(இளைப்பாறிய மாவட்ட நீதிபதி)
அவர்களின்
சமய சமூகப் பணிகளைப்
பாராட்டிக் கௌரவித்து
தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த இந்து ஆலயங்கள்,
இந்து நிறுவனங்கள், பொது நிறுவனங்கள்
ஒன்றிணைந்து எடுக்கும்
பாராட்டு விழா

இடம்: யா/டிறிபேர்க் கல்லூரி
பிரதான மண்டபம், சாவகச்சேரி.
காலம்; 04 - 07 - 99 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
விழாக் குழுவினர்
சாவகச்சேரி. (67009)


க்ராக். இது பாதங்களில் ஏற்படும் வெடிப்புகளில் இருந்து 14 நாட்களில் நிவாரணம் அளிக்கிறது.




குதிகால் வெடிப்புக்களுக்கு விரைவாக நிவாரணம்
அளிக்கிறது க்ராக் க்ரீம் மட்டுமே.




குதிகால் வெடிப்புக்கு விசேஷமான நிவாரணம்

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பபாணம்.
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்.

(சி/8052)


**திரு. தா. அமிர்தலிங்கம்** M.A.
அவர்களின்
கூட்டுறவுக் கல்வி வளர்ச்சி

# நூல் வெளியீட்டு விழா

இடம்: யா/ இந்து மகளிர் கல்லூரி
காலம்; 03-07-99 சனிக்கிழமை காலை 8 மணி
தலைவர்: திரு. பா. தனபாலன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
ஆசியுரைகள்: சுவாமி சித்ருபானந்தா
(சாரதா சேவா ஆச்சிரமம்)
கலாநிதி சபா. ஜெயராசா
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்)
வெளியீட்டுரை: பேராசிரியர் வ. ஆறுமுகம்
(தலைவர், கல்விப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[67079] - விழா அமைப்பாளர்கள்

# காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரைவுள்ளது)

# பதவி வெற்றிடம் நிரப்புவதற்கான விண்ணப்பம் கோரல்

1. பொது முகாமையாளர்

சம்பளத்திட்டம் — 165/88 — 08 — 31/97
3400 — 5650
100 x 10 — 120 x 10

தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவம் முகாமை மட்டத்தில் உள்ளவர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் ஆறு வருடத்திற்கு குறையாத முகாமை மட்டத்தில் அனுபவம்.

அல்லது

ஆ. பட்டதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டப் பதவியில் நான்கு வருட கால அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு உயர்தர பத்திரம் அல்லது க. பொ. த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

2, வயதெல்லை:-

21 — 45 வரை

தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பும்பட்சத்தில் அவற்றை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அதுவெளியிடப்படுமிடத்து நியமனத்தை இல்லாது ஒழிப்பதற்கும் வழி வகுக்கும்.

விண்ணப்ப முடிவு திகதி: 1999 - 07 - 16 பி, ப 5.00 மணிக்கு முன்னர்.
தலைவர், காரைநகர் ப. நோ. கூ. சங்கம்,
காரைநகர் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவும்.

தலைவர்,
காரைநகர் ப. நோ. கூ, சங்கம்
காரைநகர்.

(சி/8064)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 — 03 — 1961



இறப்பு 04 — 07 — 1996

**அமரர் சண்முகராசா உதயகுமார்**

திதி: சதுர்த்தி

எம் அன்பின் சிகரம் புத்திரன்
உதயனே! ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லையே எம் துயரம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, தாய், சகோதரர், சகோதரிகள்
அண்ணி, மைத்துனர், உறவினர்,
நண்பர்கள்.


இ. இராசசேகரம்,
75, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (67066)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்நொச்சித்தாழ்வு
# ...கர் தேவஸ்தானம்



## ...தன பிரதிஷ்டா
## ...ஷேக சிறப்பிதழ்



## ஆலய நிர்வாகசபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஶ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் பழமை வாய்ந்தது; பெருமை மிக்கது; வைதிக, சைவ கலாசார விருத்திக்கு இக் கோயில் ஆற்றி வருகின்ற பங்களிப்பு போற்றுதற்கு உரியது.

இவ்வாலயத்தில் நைமித்திய விழாக்கள் சிறப்புப் பூசைகள் உற்சவங்கள் என்பன ஆண்டு தோறும் சிறப்பாகநடைபெறுகின்றன

கோயிலில் நடைபெறும் நித்திய நைமித்தியக் கிரியைகளுள் மிக முக்கியமானது. மகா கும்பாபிஷேகக் கிரியை எனக் கொள்ளப்படுகின்றது.

எம்பெருமானின் திருவருள் தேவஸ்தான பிரதம குருவினதும் ஏனைய குருமாரினதும் வழிகாட்டல் நிர்வாகசபை உறுப்பினரது ஒத்துழைப்பு அடியார்களின் அன்பர்களின் ஆதரவு இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து இக் கைங்கரியத்தை நிறைவேற்ற எமக்குச் சக்தியையும் வல்லமையையும் அளித்தன.

மகாகும்பாபிஷேக வைபவத்தில் கலந்து கொள்வதும் அருள் பெறுவதும் பெரும் பேறாகும். இந்த வகையில் இன்று ஆனித் திங்கள் 18 ஆம் நாள் வெள்ளிக் கிழமை (2 - 7 - 99 ல்) நடைபெறும். மகா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் எம் பெருமானின் திருவருள் கிட்டுவதாக.

இச்சந்தர்ப்பத்தில் தங்களது பூரண பங்களிப்பை நல்கிய குருமார்கள், சிற்பாசிரியர்கள், கட்டட அமைப்பாளர் மின் தொழில் நுட்ப இணைப்பாளர்கட்கும் ஆசாரிமார்கள், தேவஸ்தான பணியாளர்கள் நிர்வாக சபை உறுப்பினர்கள் நிதி உதவி, பொருள் உதவி, சரீர உதவி செய்த அடியார்கள். ஆதரவாளர்கள் ஆகிய சகலருக்கும் எனது உளமார்ந்த நன்றியையும் கடமைப்பாட்டுனையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வினை தீர்க்கும் விநாயகனே சரணம்
வணக்கம்

S.T பத்மநாதன்
தலைவர்
தேவஸ்தான நிர்வாக சபை

## உலகெங்கும் இன்னல் நீங்கி இன்பம் சூழ்வதாகுக!

உலகிலே ஆன்மாக்களின் இன்னல்களைந்து அருள்பாலிக்கும் கண்கண்ட கடவுளாக விளங்குபவர் விநாயகப் பெருமான். பிரணவ வடிவாகிய அவரே விண்ணுக்கும் மண்ணுக்கும் தலைவனாக விளங்குபவர். அப்பெருந்தகை ஐங்கரனே அனைத்து வழிபாடுகளிலும் முதன்மை பெறுபவர். அத்தகைய தெய்வீகப் பெருமைமிக்க பெருமானுக்கு எமது பிரதேசத்திலே ஊர்தோறும் கோயில்கள் அமைத்து ஆன்றோர் பக்தியுடனும், நம்பிக்கையுடனும் வழிபாடியற்றி வந்துள்ளனர்.

அடியார் துயர் தீர்க்கும் எம்பெருமான் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு என்னும் தலத்தில் ஶ்ரீ சித்தி விநாயகர் என்ற திருநாமத்தோடு கோயில் கொண்டு அருள் பாலித்து வரும் அற்புதத்தினால் ஆலய நிர்வாக சபையினரதும் ஊர் மக்களினதும் பக்தி பூர்வமான தொண்டினால் திருப்பணிகள் நிறைவேறி மகா கும்பாபிஷேகம் நிகழவிருப்பது எம்மனைவருக்கும் மகிழ்ச்சிதரும் விடயமாகும். திருப்பணி செய்வதும் அதன் நிறைவைக் காட்டும் மகாகும்பாபிஷேகம் நிகழக் காண்பதும் மிக உன்னதமான திருவருட் பேறாகும்.

விநாயக வழிபாட்டின் பெறுபேறாக அமையும் இம் மகாகும்பாபிஷேகத்தினால் எம்பெருமானின் திருவருள் எங்கும் பொலிந்து விளங்குவதாகுக! இக்கிராமத்தில் நிகழும் இப்புண்ணிய கைங்கரியத்தினால் உலகெங்கும் இன்னல் நீங்கி இன்பம் சூழ்வதாகுக! மக்கள் வளமான வாழ்வு பெற்று மகிழ்வுடன் திகழவும் ஆலய பரிபாலனம் இடையீடின்றி நடைபெறவும், ஆலயப் பண்பாடு சிறந்தோங்கவும் இக் கும்பாபிஷேக நன்னாளில் சாந்நித்தியம் மிகுந்து விளங்கும் எம்பெருமானின் திருவருளை முன்வைத்து அனைவரையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்.

## துர்க்கா துரந்தரியின் ஆசி

''திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

அரியாலை ஶ்ரீ சித்திவிநாயகராலயக் குடமுழுக்கு விழாவை வாழ்த்துவதில் நான் பெருமிதம் அடைகின்றேன். எமக்கு வாழ்வும் வளமும் அளிக்கும் கருணையுள்ள தெய்வமாக விளங்குபவர் விநாயகப்பெருமான்.

அரியாலை மக்களின் அன்றாட வழிபாட்டை ஏற்று அருள்புரிபவர் இவர் என்பதை அன்பர்கள் பலர் சொல்லக்கேட்டு ஆனந்தமடைந்துள்ளேன். இவ்வூர் மக்களின் கல்விமேம்பாடு, பண்பாட்டுச் சிறப்பு, தெய்வ நம்பிக்கை அனைத்தும் அன்றும் இன்றும் நாடும் ஏடும் போற்றிவருவது கண்கூடு.

கோயில்களே எமது பண்பாட்டு அருள் நிலையங்கள் இவற்றைக் காலம் புதுக்கியும் செப்பனிட்டும் குடமுழுக்கு விழா எடுப்பது சைவமக்களின் இன்றியமையாத கடமையாகும். இந்த வகையில் அரியாலை நீர்நொச்சித்தாழ்வு மக்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே. எல்லாம் வல்ல சித்தி விநாயகப் பெருமான் இவர்கள் அனைவருக்கும் எல்லா நலமும் கொடுத்து இனிதுவாழ வைப்பாராக என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
தலைவர்ஶ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## ஆலய வரலாற்றுச் சுருக்கம்

(1 ஆம் கலத் தொடர்)

பெருமானுக்கு விநாயகர் ஆலயத்துடன் இணைத்துத் தனியாக ஒரு கோயில் அமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது

1973 இல் ஶ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு இராஜ கோபுரம் அமைக்கப் பட்டு கும்பாபிஷேகம் விமரிசையாக நிறைவேறியது

1981 வைகாசி மாதத்தில் சித்தி விநாயகர் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம்நடைபெற்றது. இதுவே கடைசியாக நடைபெற்ற மகா கும்பாபிஷேகம் ஆகும்.

கடைசியாக மகாகும்பாபிஷேகம் நடைபெற 17 வருடங்கள்கழிந்த நிலையில்மீண்டும் மகா கும்பாபிஷேகம் நடைபெறவேண்டியது அவசியம் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த முடிவுக்கு அமைய 16 - 9 - 98 அன்று புதன்கிழமை பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சில புனருத்தாரண வேலைகள் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்டன. கொடித் தம்ப தரிசனத்துக்கான கட்டட மாற்றம், வசந்த மண்டப முகப்புத் தோற்ற மாற்றம், முருகனை வலம் வரக் கூடிய முறையில் செய்யப்பட்ட மாற்றம் போன்றவையுடன் முன் மண்டபத்தை மணி மண்டபமாக மாற்றியதும் குறிப்பிடக்கூடிய அம்சங்களாகும். அத்துடன் புதிய மூல மூர்த்தி பிரதிஷ்டை செய்தமையும் சிவன் கோயிலில் புதிதாக தெட்சணா மூர்த்தி செய்யப்பட்டமை, சந்தான கோபாலர் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமையும் விசேடமாகக் குறிப்பிட வேண்டிய அம்சங்களாகும்.

மகா கும்பாபிஷேகம் இன்று ஆனித் திங்கள் 18 ஆம் நாள் வெள்ளிக்கிழமை [2-7-99 இல்] நிறைவேறத் திருவருள் பாலித்துள்ளது. தொடர்ந்தும் அவரருள் கிட்டப் பிரார்த்திப்போமாக.

விநாயகர் சரணம்.
— தேவஸ்தான நிர்வாகம் —

## மகா கும்பாபிஷேக மகிமை

மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களினோடு சூரியன், சந்திரன், ஜெயமானன் (ஆன்மா) ஆகிய எட்டு மூர்த்திகளையும் தன்னத்தே கொண்டு அருள் புரிபவன்தான் இறைவன்.

ஆகவேதான், நாம் விருட்சங்களையும், அக்கினியையும், மலைகளையும், கங்காதேவியையும் இறைவனாக வணங்குகின்றோம். அவ்வாறு வணங்கும் தன்மையினால் எங்கள் மனத்தில் நிலையான அன்பு வருவதில்லை; அமைதி ஏற்படுவதில்லை; எனவேதான் நாம் ஆலயங்களைக் கட்டி அங்கே திருவுருவத்தை அமைத்து ஆகம முறைப்படி வேத மந்திரங்களைச் சொல்லி, கும்பத்திலே இறைவனைப் பூசித்து, இறைவனுக்கு அபிஷேகம் செய்து, குடமுழுக்கு' விழாவை செய்கின்றோம்

இந்தக் குடமுழுக்கு விழாவில் பூமியை வணங்குவதாகிய மிர்த்சங்கிரகணம் என்ற பூமி வழிபாடும், நீரை வணங்குவதாகிய கும்பத்திலே நீர் நிறைத்து கடஸ்தாபன வழிபாடும். குண்டங்களிலே அக்கினியை வளர்த்து அக்கினி வழிபாடும் செய்து வணங்குகின்றோம். இதனை ''கற்றாங் கரியோம்பி கலியை வாராமே'' என்று. சம்பந்தர் அக்கினி வழிபாட்டின் சிறப்பை விதந்து கூறியுள்ளார்.

மந்திரங்களை ஓதுவதனால் அது வாயு பூசை எனப்படும் இந்த மந்திர ஒலியானது காற்றலை மூலம் ஆகாயத்தே சென் எல்லோர்க்கும் நன்மை பயக்குகின்றது. எப்படி நன்மை பயக்குகின்றது என்றால், ஒரு நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் யாவும் வானொலி, தொலைக்காட்சி மூலம் எல்லோரும் அறியக் கூடியது போலவும், பசுவில் இருந்து பாலைப் பெற வேண்டுமேயானால் அதனுடைய மடியில் இருந்து பெறுவது போன்றும், நாம் பஞ்ச பூதங்களின் செயற்கையினாலும், வேத மந்திர ஒலியினாலும் தேவார பாராயணங்களினாலும் இறைவனை கும்பத்திலே வரவழைத்து கும்பாபிஷேகத்தை செய்து வழிபடுகின்றோம்.

இவ்வாறு கும்பாபிஷேக மகிமையானது பல தத்துவங்களைக் கூறி அமையப் பெற்று விளங்குவதாகும்.

கிரியாரத்தினம் பிரம்ம ஶ்ரீ
சு. முரளிதரக்குருக்கள்
அரியாலை.


| | | | |
|---|---|---|---|
| அருள் எலெக்றிக்கல்ஸ் 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஜெசீபா ஏஜென்சி 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், | நியூ கமால் செரமிக்ஸ் 37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | சிற்றி ஹாட்வெயர் 55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| வினோ மர அரிவுத் தொழிலகம் தபாற் கட்டைச்சந்தி, அரியாலை, | அழகக்கோன் களஞ்சியம் ஆனந்தன்வடலி வீதி, அரியாலை, | சித்ராஸ் (முள்ளி கடை) 30/1, முள்ளி வீதி, அரியாலை. | வீடியோ படப்பிடிப்பாளர் மேகாஸ் வீடியோ 494, கண்டி வீதி, (தபாற் கட்டைச்சந்தி) அரியாலை. |

(சி/8067)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

சி. தில்லைநடராசா

என்பவரது சாரதி லைசன்ஸ், டயறி, திறப்புக் கோர்வை என்பன அடங்கிய கறுப்பு நிற பிரயாண Bag 25-6-99 வெள்ளிக்கிழமை அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியில் ஒப்படைத்துத வும்.

சிற்றி வைன் ஸ்ரோர்ஸ்,
178, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(67054)



## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

சட்டமாணி/சட்டக் கொள்கைகளில்

## கலைமாணிப் பட்டப்படிப்பிற்கான விண்ணப்பம்

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் அலுவலகத்தில் ரூபா 250 செலுத்தி 7-07-99 வரை பெற்றுக் கொள்ளலாம்.

ச. ஆ. ஞானேந்திரன்,
பிராந்திய இயக்குநர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(67089)



உ

ஓம் ஸ்ரீகணேசயா நம

மீசாலை அருள்மிகு திருநீலகண்ட

## வெள்ளைமாவடி விநாயகர் ஆலய மஹாகணபதிஹோமம் 1999

காலம்:
நிகழும் பிரமாதி வருடம் ஆனித் திங்கள் 20 ஆம் நாள் (1999-07-04) ஞாயிற்றுக்கிழமை

கிரியை ஆரம்பம்:
காலை 7.30 மணி

பிரதம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள்

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்

சிறப்புரை:
பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்
யாழ். பல்கலைக்கழகம்

★ அன்னதானம் வழங்கப்படும்.

இங்ஙனம்
வழிபடுவோர் சபையினர்

மீசாலை.

(65983)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இவ்வார இறுதி
வெள்ளிவிழா நிகழ்ச்சிகள்

## நாடக அரங்கு

- சத்தியவான் சாவித்திரி
  1999-07-03 சனிக்கிழமை காலை 9 மணி
- மயானகாண்டம்
  1999-07-03 சனிக்கிழமை பி.ப. 2-30 மணி
- காத்தவராயன்
  1999-07-04 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
- கோவலன் – கண்ணகி
  1999-07-04 ஞாயிற்றுக்கிழமைபி. ப. 2.30 மணி
- ஜீவப்பிரயத்தனம்
  1999-07-04 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணி
- ஸ்ரீவள்ளி
  1999-07-05 திங்கட்கிழமை காலை 9 மணி
- வேழம்படுத்த வீராங்கனை
  1999-07-05 திங்கட்கிழமை பி.ப 2.30 மணி

பிரவேசம் இலவசம்

ஆர்வலர் அனைவரும் வருக

(சி/8066)


## நிகழ்வு

வன்னிப் பகுதியில் இருந்து சொந்த இடங்களுக்குத் திரும்பியமாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணியளவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் இந்நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [இ-4]

## கண்காட்சியும் விற்பனையும்

யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் வதிவிடப் பயிற்சி பெற்றவர்களினால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளை காலை 9 மணிமுதல் மாலை4மணிவரை மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி வைத்தியகலாநிதி இ. இராஜேந்திரப்பிரசாத்தும் திருமதி கௌரி இராஜேந்திரப்பிரசாத்தும் கலந்து கொள்வர். (இ-6)

## காயமடைந்தவர் கொழும்புக்கு

அச்சுவேலி தெற்கில் இக்னேஸ்வராச் சந்தியில் கடந்த மாதம் 23 ஆம் திகதி படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்டு பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய பொக்கணை, வாதரவத்தையைச் சேர்ந்த பத்மநாதன் செல்வநாதன் (வயது 27) என்பவரே மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்

இவர் பலாலியில் சிகிச்சை பெற்று வந்த சமயம் இவரது மனைவியான காங்கேஸ்வரி (வயது 24) இவரது இரு பிள்ளைகள் கடந்த வெள்ளிக்கிழமை இவரை பலாலி சென்று சந்தித்தனர்.

51 ஆவது படையணித் தளபதி மேஜர் ஜெனரல் எஸ். ஆர். மாரம்பவுடன் தொடர்புகொண்ட ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறீதரன் இவர்களை பலாலிக்கு அழைத்துச் சென்றிருந்தார். (இ-9)


ALL PURPOSE MULTI DIRECTIONAL

## KOBE-52

TV/RADIO ANTENNA



- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி/7901)



## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா
கற்கைநெறித் தேர்விற்கான கருத்தரங்கு

இடம்: யாழ். மத்திய கல்லூரி
காலம்: 04-07-1999: 8.30 A.m. - 4.30 P.m.

பதிவுக் கட்டணம் ரூபா 55.00

இலவச அச்சடித்த கையேடுகள் வழங்கப்படும். நன்கு பயன்தரும் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். சென்ற வருடம் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டோர் பலர் தெரிவு செய்யப்பட்டனர்.

யா.மா. உதைபந்தாட்டப் பயிற்றுநர் சங்கம்.

(67083)



## எழுதுமட்டுவாழ் சிவன்கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம்

ஷை மஹோற்சவம் நிகழும் பிரமாதி வருடம் ஆனி மாதம் 18ஆம் நாள் 3-7-99 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள் திருவிழா நடைபெற்று திருக்கல்யாணத்துடன் நிறைவு பெறும்.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 03-07-99 | சனி 12 மணி |
| வேட்டைத்திருவிழா | 10-7-99 | சனி மாலை 3மணி |
| தேர் | 11-7-99 | ஞாயிறு காலை 10மணி |
| தீர்த்தம் | 12-7-99 | திங்கள் காலை 10மணி |
| பூங்காவனம் | 13-7-99 | செவ்வாய் மாலை 5மணி |

க. வே. நல்லகுருநாதன்.
(தர்மகர்த்தா)

(சி/8068)



## இன்று முதல் 3 நாள்களுக்கு

ஜூலை 02, 03, 04 - 1999 (வெள்ளி, சனி, ஞாயிறு)

யாழ். புனித மரியன்னை பேராலய
இளைஞர் உருவாக்கல் இயக்கம்
நடத்தும்

## A/L 99 கிறிஸ்தவம் (றோ. க.)
## இலவசக் கருத்தரங்கு

இடம்: யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, சிமித் மண்டபம்
நேரம்: தினமும் காலை 9 மணி – 5 மணி

### பாட அலகுகளும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| இரட்சணிய வரலாறு | அருள்திரு S. A. ஜெயபாலன் குருஸ் அடிகள் |
| இலங்கைத் திருச்சபை வரலாறு | அருள்திரு. சு. பிலேந்திரன் அடிகள் |
| இன்றைய உலகில் திருச்சபை | திரு. T. வசந்தன் |
| நிருப மதிப்பீடு | திருமதி வெனான்சியஸ் (அனித்தா) |
| அப்போஸ்தலர் பணி | திருமதி ஜோண் அரியதாஸ் (மல்லிகா) |
| நான்கு நற்செய்தி | அருள்திரு. ஜீவா போல் அடிகள் |
| உலகத் திருச்சபை வரலாறு | திரு. T. ரங்கன் |

YOUTH FORMATION GROUP
ST. MARY'S CATHEDRAL – JAFFNA.

விளம்பர அன்பளிப்பு:
TWINNKLE STAR
CHITS AND FINANCE
173, COLOMBOGAM ROAD, JAFFNA.

(67091)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரி எக்ஸ்ரே இயந்திரம்

# பழுது பார்ப்பதற்காக கொழும்புக்கு!

## ஐந்து வருடங்களாக பயனற்ற நிலையில் கிடந்தது

யாழ். ஆஸ்பத்திரி எக்ஸ்ரே பிரிவுக்கு 5 வருடங்களுக்கு முன் ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்பட்ட எக்ஸ்ரே இயந்திரம் பழுது பார்க்கப் படுவதற்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இந்த எக்ஸ்ரே இயந்திரம் தருவிக்கப்பட்ட பின்னர் அதனைப் பொருத்துவதற்கு தகுந்த நிபுணர்கள் இல்லாத காரணத்தால் சில வருடங்களாக பொருத்தப்படாமல் இருந்தது.

1995 ஆம் ஆண்டு இடம் பெற்ற இடப்பெயர்வின் போது எக்ஸ்ரே இயந்திரத்தின் முக்கிய உதிரிப்பாகம் ஒன்று காணாமல் போயிருந்தது. இதனால் இந்த இயந்திரத்தைப் பொருத்த முடியாத நிலை தொடர்ந்து இருந்து வந்தது.

தேவையான உதிரிப்பாகத்தை பெற்றுக் கொள்வதற்கு யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் ஜேர்மனியில் உள்ள மேற்படி எக்ஸ்ரே இயந்திரத்தை உற்பத்தி செய்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டது.

இயந்திரத்தை முழுமையாகப் பார்வையிட்ட பின்னரே எந்த உதிரிப்பாகம் தேவை என்பதைக் கண்டறிய முடியும் என்றும்—

அதற்காக இயந்திரத்தை முழுமையாக கொழும்புக்கு அனுப்புமாறும்— அந்த நிறுவனம் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து எக்ஸ்ரே இயந்திரத்தை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் இந்த இயந்திரம் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக இயந்திரத்தின் உதிரிப்பாகங்கள் அடைக்கப்பட்டுள்ள பெட்டிகளை சோதனையிட்டு முத்திரையிடும் பணிகளை படையினர் மேற்கொண்டுள்ளனர். (இ-6)


உ

ஊர்காவற்றுறை புளியங்கூடல்

இந்தன் முத்து விநாயகர் ஆலய

பாலஸ்தாபன

கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அன்புடையீர்:-

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் பிரமாதி வருடம் ஆனி மாதம் 20 ஆம் நாள் (04-07-1999) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையுள்ள சதய நட்சத்திரமும் ஷஷ்டி திதியும் சித்தயோகமும் கடகலக்கினமும் சந்திரஹோரையும் கூடிய சுப முகூர்த்தத்தில்

பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

நடைபெறத் திருவருள் கூடி உள்ளதால் அடியார்கள் அன்றும் அதற்கு முதல் நாள் நடைபெறும் கிரியைகளிலும் பங்குபற்றி விநாயகப் பெருமானின் அருள் பெற்றுய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
புளியங்கூடல்

(67098)


# தொலைக் கல்வி ஆசிரியர் பிரச்சினைகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை. 2

யாழ். மாவட்டத்தில் இயங்கும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் கற்ற, கற்கின்ற ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய தேசிய கல்வி நிறுவக தொலைக் கல்விப் பிரிவின் திட்டமிடல் அதிகாரி எஸ். வசந்தராஜா யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அவர் தற்சமயம் தொலைக் கல்வி நிலையங்களுக்கு விஜயம் செய்து நேரடியாகப் பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறார்.

ஐந்து வலயங்களிலும் தொலைக்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சிரேஷ்ட போதனாசிரியர்கள் ஆகியோருடன் யாழ். இந்துக் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு அவர் கலந்துரையாடவுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (ஐ-8)

## கொடியேற்றம்

அரியாலை, ஜூலை 2

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தின் வருடாந்த நவநாள் ஆராதனைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியுடன் ஆராதனைகள் முடிவடையும். [க-17]

## இருவர் உயிரிழப்பு

கொக்குவில் பகுதியில் கடந்த 20 ஆம் திகதி சுற்றிவளைக்க முற்பட்ட படையினருடன் இடம்பெற்ற மோதலில் தமது உறுப்பினர்கள் இருவர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இன்பன் அல்லது கலையழகன் (தர்மலிங்கம் சுகந்தன்—யாழ்ப்பாணம்), மணிவண்ணன் (சர்வானந்தன் ராஜ்குமார்—யாழ்ப்பாணம்), ஆகியோரே உயிரிழந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதைக்கப்பட்ட சடலங்களில் பல பொதுமக்களுடையவை

## விசாரணை நடத்தக் கோருகிறது ரெலோ

யாழ்ப்பாணம், ஜூலை 2

மன்னார் பூநகரி வீதியில் பாப்பாமோட்டைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட சடலங்களில் அனேகமானவை பொதுமக்களுடையவை அரசாங்கம் உடனடியாக இந்த மரணங்கள் தொடர்பாகப் பூரண விசாரணை நடத்த வேண்டும்.

மேற்கண்டவாறு ரெலோ இயக்க முதல்வர் என். சிறிகாந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்க்கோஷ் இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டு இனங்காணப் படாத நிலையில் புதைக்கப் பட்ட சடலங்களில் அனேகமானவை பொதுமக்களுடையவை.

இவர்கள் பாப்பாமோட்டைக் கிராமத்தையும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களையும் சேர்ந்தவர்கள்.

இவர்கள் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுக்களாலும் ஷெல் வீச்சுக்களாலும் கொல்லப்பட்டனர் என்றும் எமக்குத் தெரியவந்துள்ளது.

சொல்லப்பட்ட பொதுமக்களில் பலர் தமது சொந்த அலுவல்களுக்காகவும் வன்னிக்குச் செல்வதற்காகவும் சம்பவதினம் பாப்பாமோட்டைச் கிராமத்துக்கு வந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

இப்படி அவர் தெரிவித்தார்.

# விசேட அ.அட்டை தொலைத்தோர் அதனை புதிதாக பெறமுடியாது அவதி

யாழ்ப்பாணம், ஜூலை 2

தொலைந்துபோன விசேட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய விசேட அடையாள அட்டைகளைப் பெற முடியாதிருப்பதால் விசேட அடையாள அட்டைகளைத் தொலைத்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தொலைந்து போன விசேட அடையாள அட்டைகளுக்கு புதிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவுக்கு விண்ணப்பித்த 300இக்கு மேற்பட்டோரின் விண்ணப்பங்களும், பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோரின் விண்ணப்பங்களும் தேங்கிக் கிடக்கின்றன.

ஆரம்ப காலத்தில் இந்த அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்ள் புதிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பம் செய்து அடையாள அட்டைகளைப் பெற்று வந்தனர்.

தொலைந்த விசேட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அட்டைகளைப் பெற ஆரம்பத்தில் விண்ணப்பித்த 915 பேருக்குயாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவினரால் மீண்டும் புதிய அட்டைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொலைந்து போன விசேட அடையாள அட்டைகளுக்கு பதிலாக புதிய அடையாள அட்டைகள் வழங்குதல் 1998 நவம்பர் 19இல் இருந்து பாதுகாப்பு தரப்பினால் நிறுத்தப்பட்டது.

இதனால் இந்தஅடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் புதிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

இதேவேளை வன்னி மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்பவர்கள் விசேட அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு தாம் வசிக்கும் கிராம சேவகர் ஊடாக பிரதேச செயலருக்கு விண்ணப்பித்து பிரதேசசெயலர் மூலம் அந்தப் பகுதி இராணுவ பிரிக்கேட்டுக்கு விண்ணப்பம் செய்து அடையாள அட்டைகளைப் பெறவேண்டும் என்று புதிய நடைமுறை கடந்த 23 ஆம் திகதி முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (ஒ-5)

## கூடைப் பந்தாட்ட போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியாக ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு கழக அணிகளுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

விண்ணப்ப முடிவு தினம் இன்றாகும். இன்று மாலை 5.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் அணி ஒழுங்குத் தெரிவு இடம்பெறும்.


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சுப்பிரமணியம்

(வியாவில் ஐயனார் கோயில் மணியம்)

காரைநகர் பலகாட்டைப்பிறப்பிடமாகவும் வியாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் நேற்று [01-07-99] வியாழக்கிழமை காலமானார்

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா மாணிக்கத்தின் மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கனகரத்தினத்தின் அன்புத் தந்தையும் தவமணியின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, பரமசாமி மற்றும் கனகம்மாவின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [02-07-99] வெள்ளிக்கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வியாவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. கனகரத்தினம்
[மகன்]

வியாவில்,
காரைநகர்

[67105]

## திருமதி சோதிமுத்து நடராசா

கெருடாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சோதிமுத்து நடராசா அவர்கள் 29-6-99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கொக்குவிலைச் சேர்ந்த நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையா முத்தாச்சி அவர்களின் அன்பு மகளும் சிவபுத்திரன், விமலாதேவி, சிவபாக்கியம் [கனடா], இராமலிங்கம் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, மாரிமுத்து, குழந்தைவேலு, துரையப்பா, தம்பு, வைத்திலிங்கம், கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட சோமசுந்தரம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் சிவா, விக்கினராசா [கனடா], பாலகௌரி [கொழும்பு], ஆனந்தலிங்கம் [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் [2-7-99] வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
பொ. நடராசா
(கணவர்)

கெருடாவில்,
தொண்டமானாறு.

(67104)



யாழ். வண். கிழக்கு கலட்டி எச்சாட்டி

ஸ்ரீ மகாமாரியம்பாள்

தேவஸ்தானம்

மகா சபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 4-7-99 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் தேவஸ்தான முன் மண்டபத்தில் தலைவர் கலாநிதி க. குணராசா அவர்களின் தலைமையில் நடைபெறும். மகாசபை அங்கத்தவர்கள், திருவிழா உபயகாரர்கள் மற்றும் அம்பாள் அடியார்கள் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்கும்படி வேண்டுகின்றோம்.

[67103]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கண்டபடி கைதாவது குறித்து
# மனிதநேய அமைப்பு ஒன்றியம் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 2
குடாநாட்டில் அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டுப் பின்னர் குற்றமற்றவர் என விடுவிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் கூட்டம் அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைய அலுவலகத்தில் நடைபெற்ற சமயம் இது விடயம் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு!

★ அநாமதேயக் கடிதங்களின் அடிப்படையில் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு பல சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு பின்னர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்படுகின்றார்கள். இதன் காரணமாக அவர்கள் உள, உடல் தாக்கங்களுக்கு உள்ளாவதுடன் அவர்களது உறவினர்களும் பாதிப்புக்குள்ளாகுகின்றனர். இந்நிலையை நீக்க உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடுதல்,

★ செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் சகல புதைகுழிகளையும் மழை காலத்துக்கு முன்னர் தோண்டி, உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆசிய பவுண்டேசன், மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவற்றைக் கோருதல்.

★ செம்மணி புதைகுழி விடயத்தில் சோமரத்ன ராஜபக்ஷ அவரது வாக்குமூலத்தில் குறிப்பிட்ட படை அதிகாரிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று கோருதல்.

★ செம்மணிப் புதைகுழியில் தோண்டப்படும் எலும்புக்கூடுகளை ஆய்வு செய்ய யாழ். பல்கலைக் கழகத்தில் ஆய்வுகூடம் அமைக்க வேண்டும் என்று கோருதல்.

(ஐ - 3 - 5)

## அருள்நெறி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள அருள் நெறி விழா நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5. 30 மணிவரை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை, துர்க்கா தேவஸ்தான தலைவர் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோர் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார்.

## குற்றமிழைத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

காரிகள் சம்பவம் நிகழ்ந்த இடத்துக்குச் சென்று நேரடியாக விசாரணை நடத்திப் பொதுமக்களிடம் இருந்து வாக்குமூலங்களைப் பெறவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி சிறீதரன் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோரும் இந்த விசாரணையின் போது படை அதிகாரிகளுடன் பிரசன்னமாகி இருப்பர்.

மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி சம்பவம் நிகழ்ந்த இடத்தில் உள்ள பொதுமக்களிடமும் ஆஸ்பத்திரிகளில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ள பொதுமக்களிடமும் வாக்குமூலங்களைப் பெறுவார்.

இதற்கிடையில் பொதுமக்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக இரு படையினர் நேற்று கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மீது விசாரணை நடத்தி இவர்கள் குற்றம் இழைத்திருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேஜர்ஜெனரல் மல்லவாராச்சி மேலும் தெரிவித்தார்.

கிளைமோர் குண்டு வெடித்த பின்னர் அந்த வாகன அணியில் வந்த ஏனைய படையினரில் சிலர் முதலில் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் —

அதன் பின்னர் 52 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மல்லவாராச்சியும் சாவகச்சேரி பிரிக்கேட் கொமாண்டர் கேணல் சமரவீராவும் அங்கு நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்துவிட்டுச் சென்றனர் என்றும் —

அவர்கள் சென்ற பின்பே மற்றும் சோதனைச் சாவடிகளில் இருந்த படையினர் பொதுமக்களைத் தாக்கினர் என்றும் கூறப்படுகிறது.

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்)

றார்.

கண்ணிவெடிகளை கண்டுபிடிப்பது மற்றும் கண்ணிவெடிகள் உள்ளதாகக் கூறப்படும் இடங்களை அடையாளப்படுத்தல் உட்பட பல துறைகளில் இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை எதிர்வரும் 6 ஆம் திகதி நான்கு மோப்ப நாய்களுடன் கண்ணி வெடி அகற்றும் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஆறு வெளிநாட்டு நிபுணர்கள் செஞ்சிலுவைச் சர்வதேச குழுக்கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

கண்ணிவெடி அகற்றும் உபகரணங்களும் இவர்களுடன் இக்கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

இம்மாதம் நடுப் பகுதியில் இங்கு கண்ணி வெடிஅகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ–5–6–9)

## நுணாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பஸ்ஸே கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானது. என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதி ஓரத்தில் மரம் ஒன்றில் இந்தக் கிளைமோர் கண்ணிவெடி மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்ற இடத்துக்கு சமீபமாக இராணுவச்சோதனை சாவடி ஒன்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் இப் பகுதியில் மிதிவெடி ஒன்றில் சிக்கி மாடு ஒன்று இரு கால்களையும் இழந்தது.

(இ–117-31-5)

## மூளாய்வரை பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

வடபிராந்தியபோக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்சேவையை மூளாய் வரை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் இருந்து புறப்படும் 782 இலக்கமுடைய பஸ் தனது சேவையை சுழிபுரம் சந்தியுடன் நிறுத்திக் கொள்கிறது. இதனால் இந்த பஸ்ஸில் பயணம் செய்யும் காரைநகர், மூளாய், பொன்னாலை, தொல்புரம் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நீண்டதூரம் நடந்தே தமது பயணத்தை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இலக்கமுடைய பஸ் சேவையை மூளாய் வரை விஸ்தரிக்குமாறு வடபிராந்திய போக்குவரத்துசபையிடம் கோரிக்கை விடுவது என்று ஏகமனதானதீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

(இ–99)

## பேச்சுஇடைநிறுத்தம்

பெல்பாஸ்ட், ஜூலை 2
வட அயர்லாந்து சமாதானப் பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட அயர்லாந்தில் கத்தோலிக்கப் பகுதி ஒன்றின் ஊடாகச் சென்ற புரட்டஸ்தாந்து பேரணி ஒன்றுக்கு தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்தே பேச்சு இடை நிறுத்தப்பட்டது. (ஐ–க)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸாருக்கு காயம் ஏற்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ரயில் நிலையக் களஞ்சியத்துக்கு அருகே பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் களஞ்சியம் இருந்ததாகவும் —

தாக்குதலால் இந்தக் களஞ்சியம் சேதமடைந்திருந்தால் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ–6-21)

## மடு...

(முதலாம் பக்கத் தெடர்)

பார்க்கப்பட்டது.

சுமார் 50 ஆயிரம்பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதும் நேற்றிரவு வரை சுமார் 10 ஆயிரம் பேர் வரையே உற்சவத்துக்காக தேவாலயத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

கடற்றொழில் நீரியல் வளத்துறை பிரதி அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோ மடுத் தேவாலயத்துக்கு விஜயம் செய்து வழிபாடு நடத்தினார். (இ–164-6)

## அரசாங்க...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி அரச மருத்துவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்ததையடுத்து நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்த சங்கப் பிரதிநிதிகள் வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதென்று தீர்மானித்தனர்.

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதால், சுகாதார சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளதை வாபஸ் பெறவேண்டும் என்று மருத்துவர் சங்கம் கோரியுள்ளது.

ஜனாதிபதியுடன் இன்று நடைபெறும் பேச்சுக்களில் தமது பிரச்சினைகளுக்குச் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாகவும் அரச மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

(இ–6–9)

## தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ நுணாவில் மேற்கில் பேக்கரி ஒன்றில் பாண் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த மறவன்புலோவைச் சேர்ந்த சிவசுப்பையா சிங்கராசா [வயது 23]

★ நுணாவில் மேற்கைச் சேர்ந்த செல்லப்பா வசந்தரூபன் [வயது 27]

★ பாடசாலை வீதியைச் சேர்ந்த சரவணமுத்து கோணலிங்கம் [வயது 33]

★ வீதி அமைப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த மகேந்திரன் மதனரூபன் [வயது 24]

★ நுணாவில் மேற்கைச் சேர்ந்த தம்பு அப்புத்துரை [வயது 27]

ஆகியோரே சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைதடி மேற்கைச் சேர்ந்த வசந்தநாதன் ஜெயகுமார் [வயது 19] என்பவரும் மற்றும் ஒருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-6–117)


NEW SCIENCE COLLEGE
JAFFNA.

இணைந்த கணிதம்
A/L – 2000 நிகழ்தகவு
ஆரம்பம்: 03 – 07 – 1999 [சனி 7.30 A.M.]
A/L – 2001 பொதுத்தீர்வு
ஆரம்பம்: 03 - 07 – 1999 [சனி 11. 30 A.M]
ஆசிரியர்: A. பத்மநாதன்.
[67057]

உதவியாளர் தேவை

எமது நிறுவனத்தில் மேற்படி பதவிக்கு ஆள்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். (ஆண்கள் மட்டும்) 40 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
தொடர்பு நேரம்: பி. ப. 3. 30 – 6. 00 மணி
எடிசன் கல்வி நிலையம்
(யாழ். இந்து அருகில்)
411, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (67092)

மிற்சுயீ (Mitsui), அட்லஸ் (Atlas)
சிமெந்து விற்பனை

ரோக்கியோ சிமெந்து கம்பனியின்
மிற்சுயீ (Mitsui), அட்லஸ் (Atlas)
சிமெந்துகள் சில தினங்களில் விற்பனைக்கு வருகின்றன. உங்கள் ஓடர்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
இவை அனைத்தும் பொதி செய்யப்பட்ட சில தினங்களில் இங்கு விற்பனைக்கு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.
விவரங்களுக்கு!
ஜெசிபா ஏஜென்சி
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி/8065)

விக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
இறுதிப் பிரிவு
ஆரம்பம்: 05 - 07 - 99
(8. 30 — 2. 00)
★ அலகு 1 இல் இருந்து பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்படும்.
(67095)

எமது புதிய வீடியோ வெளியீடுகள்!
விஜய், இஷாகோபிகா நடித்த
★ நெஞ்சினிலே
நாகார்ஜுன், சங்கவி நடித்த
★ சத்ரிய தர்மம்
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/8074)

எமது வீடியோ வெளியீடு!
சரத்குமார் - தேவயாணி
ஒருவன்
(CD பிரதி)
நாகார்ஜுன் – சங்கவி
சத்ரிய தர்மம்
பிரதி ஒன்று ரூபா 300.00
ஒருவன் V.CD விற்பனைக்குண்டு.
ஆங்கில V.CD பிரதிகளும் உண்டு.
ஆர்க்
வீடியோ லைபிறறி,
51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
ஆர்க்கிடி
யாழ்ப்பாணம்
(67101)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேட்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02- 07- 1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org